


# “தி.மு.க. மீண்டும் நாடகக்குழுக்களை உருவாக்க வேண்டும்!”

**கழக இளைஞர் அணி நடத்திய 'தி.மு.க 75 அறிவுத் திருவிழா' நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற 'இருவண்ணக் கொடிக்கு வயது 75' கருத்தரங்கத்தின் எட்டாவது அமர்வில், 'நாடகக் கலையில் கழகப் புரட்சி' என்ற தலைப்பில், நாடக செயற்பாட்டாளர் பேராசிரியர் மு.இராமசுவாமி அவர்கள் ஆற்றிய உரை :**

“பெரியார் பிரச்சாரம், பிரச்சாரம், பிரச்சாரம், நம் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்லுங்கள் என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவராக இருந்தார். பகுத்தறிவுப் பிரச்சாரத் திற்காகத்தான் அந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. தேர்தலில் நிற்பதையோ அரசியல் அதிகாரத்தைப் பற்றியோ அவர் நினைக்கவே இல்லை. பேச்சு, எழுத்து மட்டுமல்லாது, நாடகத்தையும் பரப்புரைக்கான கருவியாகக் கையாண்டது திராவிட இயக்கம்.



பேராசிரியர் மு.இராமசுவாமி
நாடக செயற்பாட்டாளர்

### மூன்று மாநிலங்கள்

இந்தியாவிலேயே மூன்று மாநிலங்களில்தான் நாடகங்கள் சிறந்துவிளங்கின. ஒன்று மேற்கு வங்காளம், இன்னொன்று கேரளா, மற்றொன்று தமிழ்நாடு. மேற்குவங்கம், கேரளா பொதுவுடமைக் கட்சியின் வசம் இருந்த காரணத்தால், தமிழ்நாடு திராவிட இயக்கத்தின் வசம் இருந்த காரணத்தால், கலையை தங்களுடைய கைவாளாகக் கொண்டு அவர்கள் செயல்பட்டார்கள். திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரை யாரோ எழுதினார்கள், யாரோ நடித்தார்கள் என்று இருக்கவில்லை. அவர்களே நாடகங்களை எழுதினார்கள். அவர்களே நாடகங்களை நடித்தார்கள்.



1956 -இல், 'தம்பி உனக்கான நாடகம் எங்கே?' என்று அண்ணா எழுதுகிறார் ஒரு அரசியல் தலைவர் தம்பிக்கு கடிதம் எழுதியபோது, நாடகக் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தக் கடிதத்தில் அண்ணா கிண்டலாகச் சொல்லுவார், 'அண்ணா, நாடகத்தை நீங்களே எழுதி தர மாட்டீர்களா என்று என் மீதே பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க கற்றுக் கொண்டவன் அல்லவா நீ. சரி, சரி உனக்காக நான் சில கருதுகோள்களை தருகிறேன், அவற்றை நீ நாடகமாக்கிவிடு' என்று அவரே நாடகங்களுக்கான கருப்பொருள்களைத் தம்பிக்குத் தருகிறார்.

### வீதி நாடகத்துக்கு முன்பு

ஏறக்குறைய 70-களில்தான் தமிழ்நாட்டில் கிடைக்கும் இடங்களில் எல்லாம் நாடகம் போடுவது, வீதி நாடகம், தெருமுனை நாடகம் ஆகியவை வந்தன. ஆனால், இப்படியெல்லாம் நாடகம் போடலாம் என்று 1956-இல் அண்ணா எழுதுகிறார் என்பது மிகப்பெரிய ஆச்சர்யம். கட்சியினுடைய தலைவர்களே நாடகங்களை எழுதிக் கொடுத்து தொண்டர்களை நாடகங்கள் நடத்தச் சொன்ன இயக்கம், திராவிட இயக்கம் மட்டும்தான். வேறு எங்கும் இப்படி நடந்ததாகத் தெரியவில்லை.

### 'பராசக்தி'க்கு முன்னோடி

'அம்பாள் எந்தக் காலத்திலடா பேசினாள்?,'- இது கலைஞர் 'பராசக்தி' திரைப்படத்தில் எழுதிய வசனம். ஆனால் 'பராசக்தி'க்கு முன்பே கலைஞர் 'தூக்குமேடை' நாடகத்தில் இதை எழுதிவிட்டார். 1947-இல் நடத்தப்பட்ட நாடகம் 'தூக்குமேடை'.

அந்த நாடகத்தில் பூசாரி, மாரி என்ற பெண்ணை கையைப் பிடித்து இழுக்கிறான். 'மருத்துவர்கள் பெண்களின் கையைப் பிடித்து பார்ப்பதில்லையா, அதேபோல் பகவானுக்கு நெருக்கமான நாங்களும் பெண்களின் கையைத் தொட்டால் குற்றம் ஆகாது' என்று அந்த பூசாரி சொல்கிறான். அப்போது அந்தப் பெண்ணின் அண்ணன் மாரியம்மன் சிலைக்குப் பின்னால் இருந்து பேசுகிறான். 'யாரு மாரியாத்தாவா பேசுவது?' என்று கேட்கிறான் பூசாரி. 'எந்தக் காலத்திலடா மாரியாத்தாள் பேசினாள்? மாரியாத்தாள் உனக்கு தாய், என் தங்கை மாரி உனக்கு தாசி. அட மூடனே' என்று அந்தக் காட்சியில் வசனம் வருகிறது. அதை எழுதியவர் கலைஞர். 1947-இல் கலைஞரால் எப்படி இப்படி ஒரு புரட்சிகரமான வசனத்தை எழுத முடிந்தது என்று இப்போது நினைத்தாலும் ஆச்சர்யமாக இருக்கிறது.

### எம்.ஆர்.ராதா என்னும் கலகக்காரர்

இதேபோல் 1954-இல் எம்.ஆர்.ராதா 'ராமாயணம்' நாடகம் போடுகிறார். அது வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்த நாடகத்தின் முதல் காட்சியைப் பற்றி யோசிக்கும்போது, 'இப்படியெல்லாம் நாடகம் போட முடியுமா?' என்று இப்போதும் எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. முதல் காட்சியில் ராமன் வேடத்தில் எம்.ஆர்.ராதா, லட்சுமணனுடன் வருகிறார். சுருட்டு பிடித்துக்கொண்டு, ஒரு கையில் மது நிரம்பிய சட்டியுடன் வருவார். வில்லைத் தலைகீழாகத் தொங்கப்போட்டுக்கொண்டு ராமனும் லட்சமணனும் மாட்டெலும்பைக் கடித்தபடி வருவார்கள். அது மாட்டுக்கறி என்று பார்வையாளர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக, 'என்ன லட்சுமணா, முத்தின மாட்டுக்கறியைக் கொடுத்துட்டாங்க போல' என்று சத்தமாக வசனம் பேசுவார் எம்.ஆர்.ராதா.

நீங்கள் ராமன் என்றால், கன்னத்தில் போட்டுக் கொள்வீர்கள். அந்த ராமபிரான் மாட்டுக்கறியைக் கடித்துக்கொண்டு, மது கலயத்தை கையில் பிடித்துக் கொண்டு, மது அருந்திக்கொண்டு நடித்ததெல்லாம் அதிர்ச்சி, ஆச்சரியம். சனாதனம், மனுதர்மம் என்று நீங்கள் என்னவெல்லாம் வைத்திருந்தீர்களோ அதையெல்லாம் போட்டு உடைக்கின்ற மாதிரியான ஒரு விஷயத்தை ரொம்ப இயல்பாக ஒரு காட்சியில் செய்து காட்டுவது என்பது அதிர்ச்சியாகவும் இருக்கிறது, ஆச்சரியமாகவும் இருக்கிறது. நாம் இப்படி எல்லாம் அந்த உயரத்திற்கு வர முடியவில்லையே என்று நினைக்கிறேன். ஆனால், அந்த உயரத்தைத் தொட முடியுமா என்பது எனக்கு இன்றும் புரியவில்லை. தனிப்பட்ட நபரால் முடியாது. ஆனால், ஒரு அமைப்பாக இருந்தால் அதைச் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன்.

2003-இல் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் 'கலக்காரர் தோழர் பெரியார்' என்று நாடகம் போட்டோம். அப்போது இந்தத் தலைப்புக்கு அனுமதி அளிக்க காவல்துறை ரொம்பவே யோசித்தது. அவர்களைப் பொறுத்தவரை 'கலகம்' என்றால் ரவுடித்தனம், தகராறு செய்வது. 'ஏன் கலகக்காரர் என்று தலைப்பு வைக்கிறீர்கள்? புரட்சியாளர் என்று தலைப்பு வைக்கலாமே' என்றார்கள். அவர்களைப் பொறுத்தவரை புரட்சி என்பது சாதாரண வார்த்தை, கலகம்தான் மோசமான வார்த்தை.

அப்போது முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா எஸ்மா, டெஸ்மா மூலம் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பினார். 'கலகக்காரர் தோழர் பெரியார்' நாடகம் நடத்தி நிதி திரட்டி, பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்குக் கொடுத்தோம்.

பரதமுனி எழுதியதாகச் சொல்லப்படும் 'நாட்டிய சாஸ்திர'மே பார்ப்பனியத்தை அடிப்படையாகக் கொண்டது.

நான்கு வேதங்களை அடிப்படையாகக் கொண்டுதான் நாடகம் உருவாக்கப்பட்டதாம். ரிக் வேதத்திலிருந்து எழுத்துகள், சாம வேதத்திலிருந்து இசை, யஜுர் வேதத்திலிருந்து அபிநயங்கள் , அதர்வண வேதத்திலிருந்து சுவை இவைகளை எடுத்துதான் நாடகம் உருவாக்கப்பட்டதாக 'நாட்டிய சாஸ்திரம்' சொல்கிறது.

திராவிட இயக்கம் வரும்போதுதான் இந்த தமிழ் மண்ணிலே நாடகம் என்பது விழிப்புணர்வு என்ற நிலை உருவானது. தி.மு.க.வின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் நாடகங்கள் நடத்தி, நிதி திரட்டப்பட்டது. தி.மு.க தலைமை அலுவலகமான அறிவகம் கட்டவும் நாடகம் நடத்தி திரட்டப்பட்டது.

நாடகங்களை வளர்த்து, நாடகங்களால் வளர்ந்த திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது ஏன் நாடகங்கள் நடத்துவதில்லை என்று தெரியவில்லை. தி.மு.க மீண்டும் தனக்கென்று நாடகக்குழுக்களை உருவாக்கி, நாடகங்களை நடத்த வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறேன். அப்படி நாடகக்குழுக்கள் உருவாக்கப்பட்டால் நானே பயிற்சி அளிக்கத் தயாராக இருக்கிறேன்.” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!




அறிவுத் திருவிழாவின் முதல் நாள் முதல் நிகழ்ச்சியாக 'தன்மானம் காக்கும் கழகம்' என்னும் நாடகம் 'திணை நிலவாசிகள்' நாடகக் குழுவால் நடத்தப்பட்டது. ஆரியத்தால் எப்படி மக்கள் சாதிகளாகப் பிரிக்கப்பட்டனர், அதன் தொடர்ச்சியாகவே இப்போது மதவாத அரசியல் இருக்கிறது என்பதையும் இந்த ஆதிக்கங்களுக்கு எதிராக புத்தர், வள்ளுவர் வழியில் திராவிட இயக்கம் எப்படி நடைபோட்டது என்பதையும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர்-மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் பங்களிப்புகள் குறித்தும் நாடகம் சிறப்பாக விளக்கியது. நகைச்சுவையும் கொள்கை உணர்வும் இழையோடிய இந்த நாடகம் பார்வையாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றதுடன் 'திராவிடம் என்றென்றும் வெல்லும்' என்ற நம்பிக்கையை விதைத்தது.